# கார்மேகக்கோனார் கவிதைகள்

# கவிதைகள்

## I. 'நல்லிசைப் புலவர்கள்' எனும் நூலினைப் பாண்டித்துரைத் தேவருக்கு உரிமையாக்கிப் பாடிய பாடல்.

'பாடல் சான்ற மாட மதுரையில்
நான்காம் சங்கம் நலனுற காட்டி
அமிழ்தினுமினிய தமிழ்மொழி அறிவைப்
பெறுமாறு செய்த பெருமான் உலகில்
ஈண்டிய புகழ் சேர் பாண்டித்துரையவன்
அரியவள்ளன்மைக் குரிமையாகுக
பல்லிசை நிறீஇய பாவலர் புகழ்சேர்
நல்லிசைப் புலவர்களாம் இந்நூலே!'

## II. நவராத்திரி விழாவின் போது சேதுபதி மன்னர் முன்னிலையில் ஒன்பது நாட்கள் பாடிய 18 பாடல்களுள் சில :

1. பூந்தண் மலர்க்காப் புடையுடுத்துப் பொலியு முகவா புரிபுரக்கும்
புகழ்சேர் சேது குலவேந்தன் புனித குணத்தா னருண்மனத்தான்
காந்தண் மலர்நேர் கரமாதர் காமுற் றடையுங் காமனுருங்
கவிஞர் தமக்குக் கனகநிதி களிப் போடளிக்கு மெழிலியனான்
பாந்தண் முடிசேர் புவியரசர் பராவும ராஜ ராஜவள்ளல்
பலவும் படைத்துப் படிபுரந்து பன்னா ளோங்க வருளுதியால்
தேந்தண் மலர்நேர் பதயுகளச் செல்வீ யரனார் மனமகிழுந்
தேவி தேவை யரையரரண் மனைசேர்ந் திலங்குந் திரிபுரையே

2. பஞ்சலட் சணவிலக் கியபார காவியம் பலவும் படித்துணர்ந்தோன்
பாரதிண் புயவேளி ராஜரா ஜேஸ்வரன் பலவுலகு தொழுசேதுமன்
பகருந் தயாளகுண சுமுகனர னடிதொழும் பத்தியா னுயர்புத்தியான்
கிஞ்சுக நிகர்த்தசொன் மடவார்கள் மயலுடன் கிழியெழுது கின்ற வெழிலான்
கீத வாத் தியவிநோ தன்கோடி காவலன் கேடில்நற் றமிழ்நாவலன்
கிளருமரி யாதனத் தான்கந்த மாதனத் தான்கவிக் கேதனத்தான்
மஞ்சுசெறி சோலைசூழ் தேவைநக ராதிபதி மகிதல மளிக்கும்வள்ளல்
மாகம் பராவுதரு புகழினான் தளவநன் மாலையணி புயபூதரன்
மருவுமிர ணியகெர்ப்ப யாஜிரவி குலமுத்து விஜயரகு நாதமரபோன்
எஞ்சுத லிலாதநற் கல்விவய திருநிதியொ டிறைமையும் முறைமை யுறவே
ஏற்றமுறு பர்வத குமாரியைக் குமரனைமு னீன்றதற் பரையைஞான
மிலகுமடி யார்க்கிதந் தருமருந் தைப்பணிந் திதயமுற வாழ்த்துவோமே

## கட்டளைக் கலித்துறை

3. பிரசங்க மாறி பொழிபாற் கரன்றவப் பேற்றிலுற்றோன்
அரசாங்கம் யாவு மமைந்த பிரான்றமிழ ழூாரணங்கை
வரசங்க மேற்றி வளர்ப்பவன் றேவை வளநகரான்
கரசங்க மாறங்கை! நின்னடி யானவற் காத்தருளே

## சந்த விருத்தம்

4. சீத மாமதி போலநி லாவிய தேசு ராஜசி காமணி தேவையன்
சேது ராஜ குலாதிப னேருறும் - ஜெயமாது
சேர்பு யாசல வேள்மத வாரணஞ் சேர்ச மூகசே னாபதி மாபதி
சேணு லாவரு மாகவி கேதனன் - ஜெகவீரன்

போத வேதிய ராசியி னானுயர் பூமி யோர்தவ மாகிய நீதிமன்
போது மேவிய மாதருண் மேயவன் -புலவோரின்
போக வேமிடி யார்நிதி யேதரு போக பூமியி னோர்தரு வானவன்
போது சேர்தள வார வரோதயன் - புவியோர்தம்

காது மாபெரு பாதகம் வேறுசெய் காசில் சேதுத ராபதி யேசறு
காவ லோர்பணி பாதச ரோருகன் - கவிராஜன்
காவி கேதன மாதி பதாகையன் காரு லாவரு மால்பொதி யாசலன்
கால லாருமை பாகனை யேதொழு – கனயோகன்

தீதி லாதபே ராயுள னாகவெண் டோளி பாலவி லோசனி தேவிவன்
தீய மாமகி டாசுர காதகி – திரிசூலி
தேன ளாவிய தாதகி சேர்நறு சீர்சடாடவி தேவ சிகாமணி
சீல நாயகி தாயகி யேயருள் - புரிவாயே.

## சந்தக் கலித்துறை

5. அளிகோடி யிசைபாடு தளவார மணிமேரு நிகர்தோளினான்
களியீகை பொறைசீல நிறையாதி குணமேவு கலைநாவலோன்
தளிர்நேரு பதமாதர் மதன்நீதி நெறியோடு தரையாள்பவன்
ஒளிர்தேவை நகராதி பதியாயுள் பலவாக வுலகாளவே

## III. துணைவேந்தர் லட்சுமண சாமி முதலியார் அவர்களை வரவேற்றுப் பாடிய பாடல்

சீருந் திருவு மிகுந்து சென்னை திகழும் பல்க லைக்கழகச்
சிறப்பார் துணைவேந் தர்பதவி தேடியடைய வுவந்தேற்றுங்
காரும் புகழ இந்நாளில் அரியாதனத்தி லமர்ந்திடுமெம்
அதிபா!வருக அரசர்புகழ் அறிவோய்! வருக அருந்தமிழும்
ஓரு மேன்மை யாங்கிலமும் உயரும் மருத்து வக்கலையும்
உணர்ந்தோய் வருக! கற்றவர்கட் கொருதாய்வருக! உயர்வனைத்தும்
சாரும் டாக்டர் லட்சுமண சாமி வருக! சபைக்கினிமை
தருவோய் வருக! தமிழ்நாட்டின் தவமே வருக வருகவே!

## IV. எங்கள் நாடு

1. சங்கம் வைத்துத் தமிழ்பயின்று தகைமைபெறு நாடு
தலைமைமிகு புலவர்தமைத் தந்ததிரு நாடு
வங்கமிசைக் கடல்கடந்து வளங்கொணர்ந்த நாடு
வகுத்தஅறம் பலபுரிந்து வயங்குகின்ற நாடு
துங்கமிகும் வீரர்தமைத் தோற்றுவித்த நாடு
துகளறுசீர்ப் போர்முறையால் தூய்மைபெறு நாடு
எங்குமெழிற் பொழில் சூழ்ந்து ஏர்திகழும் நாடு
எவ்வளமும் கொழித்தயாார் இசைக்குமிசை நாடு

2. ·கைத்தொழிலும் வாணிகமும் கதித்துவளர் நாடு
கவின்கலையும் உழுதொழிலும் கனிந்துமிளிர் நாடு
முத்தமிழின் இனிமையெலாம் முழுதுணர்ந்த நாடு
மூவேந்தர் குடைநிழலில் முன்பமர்ந்த நாடு
வைத்தநிதி வறியவர்க்கே வழங்குவண்மை நாடு
வானவரும் தானவரும் வந்திறைஞ்சும் நாடு
எத்திறத்தும் உவமையிலா திலங்குதமிழ் நாடு
எத்திசையும் இசைமணக்க இருந்த வெங்கள் நாடே

## V. தமிழ்த்தாய் வாழ்த்து

1. தென்னருயிர் போல்வளர்த்த செந்தமிழ்த்தா யேயுனது
பொன்னடியை யாம்வணங்கிப் புகழ்ந்துநனி வாழ்த்துதுமே

2. உலகிலுள்ள மொழிகளுள்ளே உயர்தனிச்செம் மொழியாக
இலகிமிகச் சீர்படைத்த இருந்தமிழ்த்தாய் வாழ்த்துதுமே

3. கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே மொழிகளுள்ளே
முன்றோன்றியும் மூவா மொழியரசி! வாழ்த்துதுமே

4. பல்மொழிகள் தமையீன்றும் பகரும்இளம் பருவநலம்
அல்காத தமிழ்க்கன்னி அன்னை! உன்னை வாழ்த்துதுமே.

## VI. பொங்கல் திருநாள் பாடல்கள்

1. உடற்குறுதி தருமிந்த உணவு நாள் விழாவில் அகம்
நடற்குரிய கருத்தொன்று நம்மொழியைப் பற்றியதே

2. நம்நாடு நலவுரிமை நயந்தடைந்த தேயெனினும்
நம்மொழிதான் இனுமுரிமை நன்குபெற வில்லையந்தோ!

3. அரசுமொழி யாவதற்கு ஆற்றல்தமிழ்க் கில்லையென்பார்
பரசுகலைத் தமிழ்மொழியைப் படித்தாய்ந்து பாராரே

4. மூவேந்தர் ஆட்சிசெய்த மொழிதமிழே யல்லாது
நாவேந்து பிறமொழிதான் யாதென்று நவில்வாரே

5. தாய்மொழியைக் கல்லாதார் தாங்கள்ஆங் கிலவடிமை
ஆய்முடிபு கூறுவதும் அறநெறியின் பாற்படுமோ

6. பள்ளிகளிற் கலைபயிற்றப் பயன்படுமோ தமிழென்ன
எள்ளியுரைப் பாரிவர்கள் இயற்றமிழின் இயல்புணரார்

7. இந்தியெனும் பெருவெள்ளம் இந்நாட்டில் நம்தமிழை
உந்தியிட வந்திடுமேல் அதை உந்த முந்துவமே

8. மொழிக்குழுவின் முன்னின்று மூவாத் தமிழ்மொழியை
அழிக்கவரும் எம்முடிபும் ஒழிக்கவரும் என அறைவீர்

9. புத்தாண்டு பொலிந்திடவும் புலஞ்செழித்து மலிந்திடவும்
முத்துநிகர் தமிழ்த்தாயை முறையாயக வணங்குதுமே

10. தமிழ்த்திருநாள் கொண்டாடும் தகைமைமிகு தமிழ்ப்பெரியீர்!
அமிழ்துதரும் தமிழ்த்தாயின் அடிபோற்றல் கடனாமே

தமிழ்த்தாய் போற்றுதும் தமிழ்த்தாய் போற்றுதும்
அமிழ்துறழ் அறிவாம் பால்சுரந் தளிக்கும்
தமிழ்த்தாய் போற்றதும் இன்றே
இமிழ்கடல் வரைப்பின் தமிழகத் தீரே

# கவிதைகள்

## I. ‘நல்லிசைப் புலவர்கள்’ எனும் நூலினைப் பாண்டித்துரைத் தேவருக்கு உரிமையாக்கிப் பாடிய பாடல்.

‘பாடல் சான்ற மாட மதுரையில்
நான்காம் சங்கம் நலனுற காட்டி
அமிழ்தினுமினிய தமிழ்மொழி அறிவைப்
பெறுமாறு செய்த பெருமான் உலகில்
ஈண்டிய புகழ் சேர் பாண்டித்துரையவன்
அரியவள்ளன்மைக் குரிமையாதுக
பல்லிசை நிறீஇய பாவலர் புகழ்சேர்
நல்லிசைப் புலவர்களாம் இந்நூலே!’

## II. நவராத்திரி விழாவின் போது சேதுபதி மன்னர் முன்னிலையில் ஒன்பது நாட்கள் பாடிய 18 பாடல்களுள் சில :

1. பூந்தண் மலர்க்காப் புடையுடுத்துப் பொலியு முகவா புரிபுரக்கும்
புகழ்சேர் சேது குலவேந்தன் புனித குணத்தா னருண்மனத்தான்
காந்தண் மலர்நேர் கரமாதர் காமுற் றடையுங் காமனருங்
கவிஞர் தமக்குக் கனகநிதி களிப் போடளிக்கு மெழிலியனான்
பாந்தண் முடிசேர் புவியரசர் பராவும் ராஜ ராஜவள்ளல்
பலவும் படைத்துப் படிபுரந்து பன்னா ளோங்க வருளுதியால்
தேந்தண் மலர்நேர் பதயுகளச் செல்வி யரனார் மனமகிழுந்
தேவி தேவை யரையரரண் மனைசேர்ந் திலங்குந் திரிபுரையே

2. பஞ்சலட் சணவிலக் கியபார காவியம் பலவும் படித்துணர்ந்தோன்
பாரதிண் புயவேளி ராஜரா ஜேஸ்வரன் பலவுலகு தொழுசேதுமன்
பகருந் தயாளகுண சமுகரை வழிதொழும் பத்தியா னுயர்புத்தியான்
கிஞ்சுக நிகர்த்தசொன் மடவார்கள் மயலுடன் கிழியெழுது கின்ற வெழிலோன்
கீத வாத் தியவிநோ தன்கோடி காவலன் கேடில்நற் றமிழ்நாவலன்
கிளருமரி யாதனத் தானந்த மாதனத் தான்கவிக் கேதனத்தான்
மஞ்சுசெறி சோலைசூழ் தேவைநக ராதிபதி மகிதல மளிக்கும்வள்ளல்
மாகம் பராவுதரு புகழினான் தளவநன் மாலையணி புயபூதரன்
மருவுமிர ணியகெர்ப்ப யாஜிரவி குலமுத்து விஜயரகு நாதமரபோன்
எஞ்சுத லிலாதநற் கல்விவய திருநிதியொ டிறைமையும் முறைமை யுறவே
ஏற்றமுறு பர்வத குமாரியைக் குமரனைமு னீன்றதற் பரையைஞான
மிலகுமடி யார்க்கிதந் தருமருந் தைப்பணிந் திதயமுற வாழ்த்துவோமே

## கட்டளைக் கலித்துறை

3. பிரசங்க மாறி பொழிபாற் கரன்றவப் பேற்றிலுற்றோன்
அரசாங்கம் யாவு மமைந்த பிரான்றமிழ ழாரணங்கை
வரசங்க மேற்றி வளர்ப்பவன் றேவை வளநகரான்
கரசங்க மாறங்கை! நின்னடி யானவற் காத்தருளே

## சந்த விருத்தம்

4. சீத மாமதி போலநி லாவிய தேசு ராஜசி காமணி தேவையன்
சேது ராஜ குலாதிப னேருறும் - ஜெயமாது
சேர்பு யாசல வேள்மத வாரணஞ் சேர்ச மூகசே னாபதி மாபதி
சேணு லாவரு மாகவி கேத்னன் - ஜெகவீரன்

போத வேதிய ராசியி னானுயர் பூமி யோர்தவ மாகிய நீதிமன்
போது மேவிய மாதருண் மேயவன் -புலவோரின்
போக வேமிடி யார்நிதி யேதரு போக பூமியி னோர்தரு வானவன்
போது சேர்தள வார வரோதயன் - புவியோர்தம்

காது மாபெரு பாதகம் வேறுசெய் காசில் சேதுத ராபதி யேசறு
காவ லோர்பணி பாதச ரோருகன் - கவிராஜன்
காவி கேதன மாதி பதாகையன் காரு லாவரு மால்போதி யாசலன்
கால லாருமை பாகனை யேதொழு – கனயோகன்

தீதி லாதபே ராயுள னாகவெண் டோளி பாலவி லோசனி தேவிவன்
தீய மாமகி டாசுர காதகி – திரிசூலி
தேன ளாவிய தாதகி சேர்நறு சீர்சடாடவி தேவ சிகாமணி
சீல நாயகி தாயகி யேயருள் - புரிவாயே.

## சந்தக் கலித்துறை

5. அளிகோடி யிசைபாடு தளவார மணிமேரு நிகர்தோளினான்
களியீகை பொறைசீல நிறையாதி குணமேவு கலைநாவலோன்
தளிர்நேரு பதமாதர் மதன்நீதி நெறியோடு தரையாள்பவன்
ஒளிர்தேவை நகராதி பதியாயுள் பலவாக வுலகாளவே

## III. துணைவேந்தர் லட்சுமண சாமி முதலியார் அவர்களை வரவேற்றுப் பாடிய பாடல்

சீருந் திருவு மிகுந்து சென்னை திகழும் பல்க லைக்கழகச்
சிறப்பார் துணைவேந் தர்பதவி தேடியடைய வுவந்தேற்றங்
காரும் புகழ இந்நாளில் அரியாதனத்தி லமர்ந்திடுமெம்
அதிபா!வருக அரசர்புகழ் அறிவோய்! வருக அருந்தமிழும்
ஒரு மேன்மை யாங்கிலமும் உயரும் மருத்து வக்கலையும்
உணர்ந்தோய் வருக! கற்றவர்கட் கொருதாய்வருக! உயர்வனைத்தும்
சாரும் டாக்டர் லட்சுமண சாமி வருக! சபைக்கினிமை
தருவோய் வருக! தமிழ்நாட்டின் தவமே வருக வருகவே!

## IV. எங்கள் நாடு

1. சங்கம் வைத்துத் தமிழ்பயின்று தகைமைபெறு நாடு
தலைமைமிகு புலவர்தமைத் தந்ததிரு நாடு
வங்கமிசைக் கடல்கடந்து வளங்கொணர்ந்த நாடு
வகுத்தஅறம் பலபுரிந்து வயங்குகின்ற நாடு
துங்கமிகும் வீரர்தமைத் தோற்றுவித்த நாடு
துகளறுசீர்ப் போர்முறையால் தூய்மைபெறு நாடு
எங்குமெழிற் பொழில் சூழ்ந்து ஏர்திகழும் நாடு
எவ்வளமும் கொழித்தயார் இசைக்குமிசை நாடு

2. கைத்தொழிலும் வாணிகமும் கதித்துவளர் நாடு
கவின்கலையும் உழுதொழிலும் கனிந்துமிளிர் நாடு
முத்தமிழின் இனிமையெலாம் முழுதுணர்ந்த நாடு
மூவேந்தர் குடைநிழலில் முன்பமர்ந்த நாடு
வைத்தநிதி வறியவர்க்கே வழங்குவண்மை நாடு
வானவரும் தானவரும் வந்திறைஞ்சும் நாடு
எத்திறத்தும் உவமையிலா திலங்குதமிழ நாடு
எத்திசையும் இசைமணக்க இருந்த வெங்கள் நாடே

## V. தமிழ்த்தாய் வாழ்த்து

1. தென்னருயிர் போல்வளர்த்த செந்தமிழ்த்தா யேயுனது
பொன்னடியை யாம்வணங்கிப் புகழ்ந்துநனி வாழ்த்துதுமே

2. உலகிலுள்ள மொழிகளுள்ளே உயர்தனிச்செம் மொழியாக
இலகிமிகச் சீர்படைத்த இருந்தமிழ்த்தாய் வாழ்த்துதுமே

3. கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே மொழிகளுள்ளே
முன்றோன்றியும் மூவா மொழியரசி! வாழ்த்துதுமே

4. பல்மொழிகள் தமையீன்றும் பகரும்இளம் பருவநலம்
அல்காத தமிழ்க்கன்னி அன்னை! உன்னை வாழ்த்துதுமே.

## VI. பொங்கல் திருநாள் பாடல்கள

1. உடற்குறுதி தருமிந்த உணவு நாள் விழாவில் அகம்
நடற்குரிய கருத்தொன்று நம்மொழியைப் பற்றியதே

2. நம்நாடு நலவுரிமை நயந்தடைந்த தேயெனினும்
நம்மொழிதான் இனுமுரிமை நன்குபெற வில்லையந்தோ!

3. அரசுமொழி யாவதற்கு ஆற்றல்தமிழ்க் கில்லையென்பார்
பரசுகலைத் தமிழ்மொழியைப் படித்தாய்ந்து பாராரே

4. மூவேந்தர் ஆட்சிசெய்த மொழிதமிழே யல்லாது
நாவேந்து பிறமொழிதான் யாதென்று நவில்வாரே

5. தாய்மொழியைக் கல்லாதார் தாங்கள்ஆங் கிலவடிமை
ஆய்முடிபு கூறுவதும் அறநெறியின் பாற்படுமோ

6. பள்ளிகளிற் கலைபயிற்றப் பயன்படுமோ தமிழென்ன
எள்ளியுரைப் பாரிவர்கள் இயற்றமிழின் இயல்புணரார்

7. இந்தியெனும் பெருவெள்ளம் இந்நாட்டில் நம்தமிழை
உந்தியிட வந்திடுமேல் அதை உந்த முந்துவமே

8. மொழிக்குழுவின் முன்னின்று மூவாத் தமிழ்மொழியை
அழிக்கவரும் எம்முடிபும் ஒழிக்கவரும் என அறைவீர்

9. புத்தாண்டு பொலிந்திடவும் புலஞ்செழித்து மலிந்திடவும்
முத்துநிகர் தமிழ்த்தாயை முறையாக வணங்குதுமே

10. தமிழ்த்திருநாள் கொண்டாடும் தகைமைமிகு தமிழ்ப்பெரியீர்!
அமிழ்துதரும் தமிழ்த்தாயின் அடிபோற்றல் கடனாமே

தமிழ்த்தாய் போற்றுதும் தமிழ்த்தாய் போற்றுதும்
அமிழ்துறழ் அறிவாம் பால்சுரந் தளிக்கும்
தமிழ்த்தாய் போற்றதும் இன்றே

# கவிதைகள்

## I. 'நல்லிசைப் புலவர்கள்' எனும் நூலினைப் பாண்டித்துரைத் தேவருக்கு உரிமையாக்கிப் பாடிய பாடல்.

'பாடல் சான்ற மாட மதுரையில்
நான்காம் சங்கம் நலனுற காட்டி
அமிழ்தினுமினிய தமிழ்மொழி அறிவைப்
பெறுமாறு செய்த பெருமான் உலகில்
ஈண்டிய புகழ் சேர் பாண்டித்துரையவன்
அரியவள்ளன்மைக் குரிமையாகுக
பல்லிசை நிறீஇய பாவலர் புகழ்சேர்
நல்லிசைப் புலவர்களாம் இந்நூலே!'

## II. நவராத்திரி விழாவின் போது சேதுபதி மன்னர் முன்னிலையில் ஒன்பது நாட்கள் பாடிய 18 பாடல்களுள் சில :

1. பூந்தண் மலர்க்காப் புடையுடுத்துப் பொலியு முகவா புரிபுரக்கும்
புகழ்சேர் சேது குலவேந்தன் புனித குணத்தா னருண்மனத்தான்
காந்தண் மலர்நேர் கரமாதர் காமுற் றடையுங் காமனருங்
கவிஞர் தமக்குக் கனகநிதி களிப் போடளிக்கு மெழிலியனான்
பாந்தண் முடிசேர் புவியரசர் பராவும் ராஜ ராஜவள்ளல்
பலவும் படைத்துப் படிபுரந்து பன்னா ளோங்க வருளுதியால்
தேந்தண் மலர்நேர் பதயுகளச் செல்வி யரனார் மனமகிழுந்
தேவி தேவை யரையரண் மனைசேர்ந் திலங்குந் திரிபுரையே

2. பஞ்சலட் சணவிலக் கியபார காவியம் பலவும் படித்துணர்ந்தோன்
பாரதின் புயவேளி ராஜரா ஜேஸ்வரன் பலவுலகு தொழுசேதுமன்
பகருந் தயாளகுண சமுகனர வடிதொழும் பத்தியா னுயர்புத்தியான்
கிஞ்சுக நிகர்த்தசொன் மடவார்கள் மயலுடன் கிழியெழுது கின்ற வெழிலான்
கீத வாத் தியவிநோ தன்கோடி காவலன் கேடில்நற் றமிழ்நாவலன்
கிளருமரி யாதனத் தான்கந்த யாதனத் தான்கவிக் கேதனத்தான்
மஞ்சுசெறி சோலைசூழ் தேவைநக ராதிபதி மகிதல மளிக்கும்வள்ளல்
மாகம் பராவுதரு புகழினான் தளவநன் மாலையணி புயபூதரன்
மருவுமிர ணியகெர்ப்ப யாஜிரவி குலமுத்து விஜயரகு நாதமரபோன்
எஞ்சுத லிலாதநற் கல்விவய திருநிதியொ டிறைமையும் முறைமை யுறவே
ஏற்றமுறு பர்வத குமாரியைக் குமரனைமு னீன்றதற் பரையைஞான
மிலகுமடி யார்க்கிதந் தருமருந் தைப்பணிந் திதயமுற வாழ்த்துவோமே

## கட்டளைக் கலித்துறை

3. பிரசங்க மாறி பொழிபாற் கரன்றவப் பேற்றிலுற்றோன்
அரசாங்கம் யாவு மமைந்த பிரான்றமிழ ழாரணங்கை
வரசங்க மேற்றி வளர்ப்பவன் றேவை வளநகரான்
கரசங்க மாறங்கை! நின்னடி யானவற் காத்தருளே

## சந்த விருத்தம்

4. சீத மாமதி போலநி லாவிய தேசு ராஜசி காமணி தேவையன்
சேது ராஜ குலாதிப னேருறும் - ஜெயமாது
சேர்பு யாசல வேள்மத வாரணஞ் சேர்ச மூகசே னாபதி மாபதி
சேணு லாவரு மாகவி கேதனன் - ஜெகவீரன்

போத வேதிய ராசியி னானுயர் பூமி யோர்தவ மாகிய நீதிமன்
போது மேவிய மாதருண் மேயவன் -புலவோரின்
போக வேமிடி யார்நிதி யேதரு போக பூமியி னோர்தரு வானவன்
போது சேர்தள வார வரோதயன் - புவியோர்தம்

காது மாபெரு பாதகம் வேறுசெய் காசில் சேதுத ராபதி யேசறு
காவ லோர்பணி பாதச ரோருகன் - கவிராஜன்
காவி கேதன மாதி பதாகையன் காரு லாவரு மால்பொதி யாசலன்
கால லாருமை பாகனை யேதொழு – கனயோகன்

தீதி லாதபே ராயுள னாகவெண் டோளி பாலவி லோசனி தேவிவன்
தீய மாமகி டாசுர காதகி – திரிசூலி
தேன ளாவிய தாதகி சேர்நறு சீர்சடாடவி தேவ சிகாமணி
சீல நாயகி தாயகி யேயருள் - புரிவாயே.

## சந்தக் கலித்துறை

5. அளிகோடி யிசைபாடு தளவார மணிமேரு நிகர்தோளினான்
களியீகை பொறைசீல நிறையாதி குணமேவு கலைநாவலோன்
தளிர்நேரு பதமாதர் மதன்நீதி நெறியோடு தரையாள்பவன்
ஒளிர்தேவை நகராதி பதியாயுள் பலவாக வுலகாளவே

## III. துணைவேந்தர் லட்சுமண சாமி முதலியார் அவர்களை வரவேற்றுப் பாடிய பாடல்

சீருந் திருவு மிகுந்து சென்னை திகழும் பல்க லைக்கழகச்
சிறப்பார் துணைவேந் தர்பதவி தேடியடைய வுவந்தேற்றுங்
காரும் புகழ இந்நாளில் அரியாதனத்தி லமர்ந்திடுமெம்
அதிபா!வருக அரசர்புகழ் அறிவோய்! வருக அருந்தமிழும்
ஓரு மேன்மை யாங்கிலமும் உயரும் மருத்து வக்கலையும்
உணர்ந்தோய் வருக! கற்றவர்கட் கொருதாய்வருக! உயர்வனைத்தும்
சாரும் டாக்டர் லட்சுமண சாமி வருக! சபைக்கினிமை
தருவோய் வருக! தமிழ்நாட்டின் தவமே வருக வருகவே!

## IV. எங்கள் நாடு

1. சங்கம் வைதததுத தமிழ்பயின்று தகைமைபெறு நாடு
தலைமைமிகு புலவர்தமைத் தந்ததிரு நாடு
வங்கமிசைக் கடல்கடந்து வளங்கொணர்ந்த நாடு
வகுத்தஅறம் பலபுரிந்து வயங்குகின்ற நாடு
துங்கமிகும் வீரர்தமைத் தோற்றுவித்த நாடு
துகளறுசீர்ப் போர்முறையால் தூய்மைபெறு நாடு
எங்குமெழிற் பொழில் சூழ்ந்து ஏர்திகழும் நாடு
எவ்வளமும் கொழித்தயார் இசைக்குமிசை நாடு

2. கைத்தொழிலும் வாணிகமும் கதித்துவளர் நாடு
கவின்கலையும் உழுதொழிலும் கனிந்துமிளிர் நாடு
முத்தமிழின் இனிமையெலாம் முழுதுணர்ந்த நாடு
மூவேந்தர் குடைநிழலில் முன்பமர்ந்த நாடு
வைத்தநிதி வறியவர்க்கே வழங்குவண்மை நாடு
வானவரும் தானவரும் வந்திறைஞ்சும் நாடு
எத்திறத்தும் உவமையிலா திலங்குதமிழ நாடு
எத்திசையும் இசைமணக்க இருந்த வெங்கள் நாடே

## V தமிழ்த்தாய் வாழ்த்து

1. தென்னருயிர் போல்வளர்த்த செந்தமிழ்த்தா யேயுனது
பொன்னடியை யாம்வணங்கிப் புகழ்ந்துநனி வாழ்த்துதுமே

2. உலகிலுள்ள மொழிகளுள்ளே உயர்தனிச்செம் மொழியாக
இலகிமிகச் சீர்படைத்த இருந்தமிழ்த்தாய் வாழ்த்துதுமே

3. கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே மொழிகளுள்ளே
முன்றோன்றியும் மூவா மொழியரசி! வாழ்த்துதுமே

4. பல்மொழிகள் தமையீன்றும் பகரும்இளம் பருவநலம்
அல்காத தமிழ்க்கன்னி அன்னை! உன்னை வாழ்த்துதுமே.

## VI. பொங்கல் திருநாள் பாடல்கள

1. உடற்குறுதி தருமிந்த உணவு நாள் விழாவில் அகம்
நடற்குரிய கருத்தொன்று நம்மொழியைப் பற்றியதே

2. நம்நாடு நலவுரிமை நயந்தடைந்த தேயெனினும்
நம்மொழிதான் இனுமுரிமை நன்குபெற வில்லையந்தோ!

3. அரசுமொழி யாவதற்கு ஆற்றல்தமிழ்க் கில்லையென்பார்
பரசுகலைத் தமிழ்மொழியைப் படித்தாய்ந்து பாராரே

4. மூவேந்தர் ஆட்சிசெய்த மொழிதமிழே யல்லாது
நாவேந்து பிறமொழிதான் யாதென்று நவில்வாரே

5. தாய்மொழியைக் கல்லாதார் தாங்கள்ஆங் கிலவடிமை
ஆய்முடிபு கூறுவதும் அறநெறியின் பாற்படுமோ

6. பள்ளிகளிற் கலைபயிற்றப் பயன்படுமோ தமிழென்ன
எள்ளியுரைப் பாரிவர்கள் இயற்றமிழின் இயல்புணரார்

7. இந்தியெனும் பெருவெள்ளம் இந்நாட்டில் நம்தமிழை
உந்தியிட வந்திடுமேல் அதை உந்த முந்துவமே

8. மொழிக்குழுவின் முன்னின்று மூவாத் தமிழ்மொழியை
அழிக்கவரும் எம்முடிபும் ஒழிக்கவரும் என அறைவீர்

9. புத்தாண்டு பொலிந்திடவும் புலஞ்செழித்து மலிந்திடவும்
முத்துநிகர் தமிழ்த்தாயை முறையாயக வணங்குதுமே

10. தமிழ்த்திருநாள் கொண்டாடும் தகைமைமிகு தமிழ்ப்பெரியீர்!
அமிழ்துதரும் தமிழ்த்தாயின் அடிபோற்றல் கடனாமே

தமிழ்த்தாய் போற்றுதும் தமிழ்த்தாய் போற்றுதும்
அமிழ்துறழ் அறிவாம் பால்சுரந் தளிக்கும்
தமிழ்த்தாய் போற்றதும் இன்றே